# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996


**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

30

அனுப்புநர்:-

திரு.S.தனராசு,B.E.,
துணை இயக்குநர்/உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கணபதி நகர் 2-வது தெரு,
கணபதி நகர் கிளை அஞ்சல் எதிரில்,
மெடிக்கல் காலேஜ் ரோடு,
தஞ்சாவூர்.
மின்அஞ்சல்-ddtjrregion@gmail.com

பெறுநர்:

செயல் அலுவலர்,
திருவிடைமருதூர் பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம்.

ந.க.எண்:597/2021தமா2 நாள்: .04.2022

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் -தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம் மற்றும் பேரூராட்சி, விஸ்வநாதபுரம் கிராமம், நி.அ.எண்: 88/3-ல் அமைந்துள்ள 41441.40ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான அனுமதி/இசைவு - ஒப்புதல் வழங்குதல் - குறித்து

பார்வை:
1)மனுதாரர் திரு.R.இசையாசு என்பவரின் விண்ணப்பம் நாள்: 28.02.2022
2)இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்: 15.03.2022
3) நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19799/2020/போ நாள்:24.12.2020
4) செயல் அலுவலர், திருவிடைமருதூர் பேரூராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்:54/2022 நாள்:28.03.2022
5)அரசாணை எண்:138 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:04.06.2004
6)அரசாணை எண்:79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:04.06.2017
7) அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020
8) அரசாணை எண்:141 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(UD4(3)) நாள்:23.9.2020
9) அரசாணை எண்:181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை(UD4(1)) நாள்:09.12.2020
10)அரசு கடிதம் எண்:19113/நவ4(3)/2017-1,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்:30.8.2017
11)நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:13686/2017/LA1, நாள்:08.09.2017

......

பார்வை (1)-ல் சுட்டிய மனுதாரர் கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு இசைவுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2)-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள்: 15.03.2022 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது.

பார்வை (4)-ல் சுட்டிய கடிதம் மூலம் சாலை, மூலை முறக்கு, உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீடு மற்றும் மின்சார வாரியத்திற்கான பொது ஒதுக்கீடுகளை தானமாக தானபத்திரம் எண்:**1015/2022** நாள்:**18.03.2022**-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2)மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.உ.இ(தமா)எண்:09/2022** என எண்ணிடப்பட்டு 2 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரம் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

3)மேலும் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்:9(ஆ)-ன் படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4)உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட பத்திர பதிவு அலுவலகத்திற்கும், நில அளவை துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5)செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறும் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

சிறப்பு நிபந்தனை:

1. (a) பார்வை (10)-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை (8)-ல் கண்ட **TNCDBR-2019** விதி எண்:47(11)-ன் படியும் மாநகராட்சி/நகராட்சி பகுதி எனில் **"Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approved of Local Body shall be issued to the applicant (s) directly.**

(b)மாநகராடசி/நகராட்சி அல்லாத பகுதியளில் **"Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with approved of Local Body shall be issued to the applicant(s)directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body.**

2. **(EWS)** பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3வருடங்களுக்கு மேலாகியும் **EWS** மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்:16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020-ன்படி **EWS** மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3.பார்வை (9) மற்றும் (10)-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களின் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamilnadu Government in G.O.Ms.No.112 Housing and Urban Development Department dated. 22.6.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Projecct or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5) பார்வை (6)-ல் கண்ட அரசாணை விதி எண்:9-ல் நகர் ஊரமைப்பு இயக்குநரிடமிருந்து செய்யக் கருதியுள்ள மேம்பாடு குறித்து முன் அனுமதி பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்ற கட்டணமாக 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச்சட்டம் (மத்திய சட்டம் 2/1899) உட்கூறு AA பிரிவு 47-ன் கீழ் சந்தை மதிப்பில் 3 விழுக்காடு நிர்யணம் செய்து அதனை வசூலித்து அரசு கணக்கு தலைப்பின் கீழ் வரவு வைத்து செய்யக் கருதியுள்ள மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ள உரிய அனுமதியளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து மேற்படி தொகையினைபெற்றுக்கொண்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**Land Use Conversion Charges:**

**0217 – Urban Development – 60 Other Urban Development Schemes – 800 other receipts - AS Receipts under Land Use conversion charges - 27 Non-Taxation fees - 09 collections.**

**DPC: 0217 60 800 AS 22790.**

6.பார்வை (5) மற்றும் (8)-ல் காண் அரசாணையின் படி மனைகளுக்கான நன்னிலை வரி ரூ.**6000/-** (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) உரிய கணக்கு தலைப்பில் நாள்: **31.03.2022** அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேலும் கொடி நாள் நிதியாக நன்னிலை வரி கட்டணத்தில் **20%** தொகையை **"Armed Force Flag Day Fund"** என்ற பெயரில் **Payable at Chennai** என **Canara Bank, Thanjavur** வங்கியில் வரைவோலை பெறப்பட்டுள்ளது.

7.பார்வை (7) -ல் காண் அரசாணையின் படி கூராய்வு கட்டணம் ரூ.6000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) உரிய கணக்கு தலைப்பில் நாள்:28.02.2022 மற்றும் மனையிடத்திற்கான 10% பொது ஒதுக்கீடு நில வழிகாட்டு மதிப்பின் அடிப்படையில் கட்டணமாக ரூ.**11000/-** (ரூபாய் பதினொராயிரம் மட்டும்) உரிய கணக்கு தலைப்பில் நாள்: **31.03.2022** அன்று செலுத்தப்பட்டுள்ளது.

1/4/22

இணை இயக்குநர்/உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
தஞ்சாவூர் மாவட்டம்.

1/4/22

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
( 2 தொகுப்பு மற்றும் அசல் தானப்பத்திரம் )

நகல்:

1. திரு.**R.**இசையாசு,
**No.530**, பாலாஜி நகர்,
அண்ணலக்ரஹாரம்,
கும்பகோணம் - 612 401. — கடித நகல்
2. இருப்பு கோப்பு - வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1
3. கோப்பு - வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1
4. சார்பதிவாளர், திருவிடைமருதூர். - வரைபடம்-1 மற்றும் நிபந்தனைகள் படிவம்-1

## திருவிடைமருதூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
## பிறப்பிப்பவர்:-திரு.ரா.முத்துக்கண்ணு

ந. க. எண்: 54/2022

நாள்:-12.05.2022

**பொருள் :** **மனைப்பிரிவு அனுமதி** – பேரூராட்சிகள் நிர்வாகம் – தஞ்சாவூர் மாவட்டம் – திருவிடைமருதூர் பேரூராட்சி – விஸ்வநாதபும் கிராமம் – புல எண்கள். 88/3–ல் அமைக்கப்பட்டுள்ள 3850 சதுர மீட்டர் (41441.40 ச.அடி) பரப்பளவில் – இசையாசு (திரு). R. என்பவரால் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு – முற்றிலும் நிபந்தனைகளுக்குட்பட்டு – மனைப்பிரிவு அனுமதி அளித்து ஆணையிடுதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. திரு.R.இசையாசு, 530, பாலாஜி நகர், அண்ணலக்ரஹாரம் கும்பகோணம் என்பவரின்மனு நாள்.18.03.2022
2. மனுதாரர் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நில உரிமை தொடர்பான சான்றிட்ட ஆவண நகல்கள்
3. திருவிடைமருதூர் வட்டாட்சியர் அவர்களின் தடையின்மை சான்று ந.க.எண்.8828/2021/ஆ1 நாள்.16.02.2022
4. தஞ்சாவூர் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் கடித எண்.ஈ1/11207/2021 நாள்.07.02.2022
5. திருவிடைமருதூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவு பத்திர எண்.1015/2021 நாள்.24.03.2022
6. நகர் ஊரமைப்பு இயக்குநர் கடிதம், ந.க.எண்.597/2021/தமா2, நாள்.01.04.2022
7. திருவிடைமருதூர் பேரூராட்சி மன்ற தீர்மான எண்.22 நாள்.29.04.2022
8. திரு. R.இசையாசு என்பவரின் ஒப்பந்த பத்திரம் நாள்.05.05.2022
9. தொடர்புடைய இதர ஆவணங்கள்

***************

**ஆணை:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் பேரூராட்சி, விஸ்வநாதபும் கிராமம், புல எண்கள். 88/3–ல் அமைக்கப்பட்டுள்ள 3850 சதுர மீட்டர் (41441.40 ச.அடி) பரப்பளவில் திரு.R.இசையாசு என்பவரால் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசிக்கப்பட்டு பார்வை 2ல் கண்டுள்ள நில உரிமை தொடர்பான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, பார்வை 3ல் கண்டுள்ளவாறு திருவிடைமருதூர் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டு, பார்வை 4ல் கண்டுள்ளவாறு தஞ்சாவூர் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து கோப்பு ஆய்வு செய்யப்பட்டு, பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டிய பொது இடங்கள் மற்றும் சாலைகளை ஒப்படைப்பு செய்தபின், அரசுக்கு செலுத்திட வேண்டிய கட்டணங்களை உரிய தலைப்பில் செலுத்திய பிறகு பேரூராட்சி மூலம் இறுதி ஒப்புதல் பெற்றுக்கொள்ள தெரிவித்து, நகர் ஊரமைப்பு துறையின் மூலம் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.இ.எண்.09/2022 என எண்ணிட்டு நிபந்தனைகளின் அடிப்படையில் தொழில்நுட்ப அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, திரு. R.இசையாசு என்பவரால் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க, திருவிடைமருதூர் பேரூராட்சி மன்றத்தின் தீர்மான எண். 22 நாள்.29.04.2022 மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, நகர் ஊரமைப்பு துறை தொழில்நுட்ப அனுமதி மற்றும் பேரூராட்சி மன்ற தீர்மானம் ஆகியவற்றின் அடிப்படையில் முற்றிலும் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதியளித்து இதன் வழி ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள் :**

1. மனுதாரரால் மனைப்பிரிவில் செயல்அலுவலருடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின்படி சாலைகள், குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் தெருமின்விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டிருப்பினும் மனைப்பிரிவு அனுமதி பெற்று பெரும்பாலான மனைகள் விற்பனை செய்யப்பட்டு குடியிருப்புகள் ஏற்படும் வரை மேற்கண்ட சாலைகள், குடிநீர் குழாய் பராமரிப்பு மற்றும் தெருமின்விளக்கு பராமரிப்பு மற்றும் மின்கட்டணம் செலுத்துதல் ஆகியவற்றை தனது சொந்த பொறுப்பில் மேற்கொள்ள வேண்டும்.
2. அரசு விதிகள் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி, பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பொது இடங்கள் மற்றும் சாலைகள் ஆகியவற்றில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
3. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன்பு ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து உரிய விதிமுறைகளின்படி கட்டிட அனுமதி பெறப்பட வேண்டும்.
4. மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக ஏதேனும் வில்லங்கம், பிரச்சினை ஏற்படும்பட்சத்தில் பேரூராட்சியினால் வழங்கப்படும் மனைப்பிரிவு அனுமதியானது எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
5. இம்மனைப்பிரிவு அனுமதி தொடர்பாக தணிக்கையில் ஏதேனும் குறைபாடுகள் மற்றும் தொகை செலுத்த தெரிவிக்கப்படின், அதனை மனுதாரர் தனது சொந்த பொறுப்பில் சரி செய்து கொடுக்க வேண்டும். மேலும் மனுதாரர் செயல்அலுவலருடன் செய்து கொண்ட ஒப்பந்தம் மற்றும் நகர் ஊரமைப்புதுறை மற்றும் பேரூராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறி செயல்படும் பட்சத்தில் இம்மனைப்பிரிவு அனுமதியை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்து, பேரூராட்சி மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
6. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாதநிலை. இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020–ம் பாடி EWS ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

7 "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016), The promoter has to advertise, market, book sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority – ன் படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8 நகர் ஊரமைப்புத் துறையால்அங்கீகரிக்கப்பட்டவரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல்கூடாது.

9. இரு சாலைகள்சந்திக்கும் இடத்தில்அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரை படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்படவேண்டும்.

10. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR–2019–ல் குறிப்பிட்டுள்ள Residential use–ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்படும்.

11. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையைசாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

12. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும். 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

13. மனுதாரர் நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றதீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

14. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல எனஅறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission / Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission / Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

15. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர்ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடநகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.

16. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்தவிதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

12/5/22

செயல் அலுவலர்
பேரூராட்சி அலுவலகம்
திருவிடைமருதூர்
தஞ்சாவூர் மாவட்டம்.

பேரூராட்சி அலுவலகம் தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர்

12.5.22

பெறுநர்:– திரு.R.இசையாசு
530, பாலாஜி நகர்,
அண்ணலக்ரஹாரம்
கும்பகோணம்.

**நகல் :**

1. நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குநர்/ உதவி இயக்குநர் (பொ), தஞ்சாவூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சார்பதிவாளர் திருவிடைமருதூர்.
3. அலுவலக கோப்பு.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate